*1970 ஆகஸ்ட் 25]*

reveal that these flowers were used to be taken to the Mysore Palace Srirangapuram because the ladies there liked the jasmine flowers of Hosur. Under these circumstances, if modern technique of cultivation is taught and helped, the ryots will take to this cultivation. Will the Government re-examine the whole thing and see that justice is done to Hosur taluk?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மல்லிகையின் நல்ல குணத்தைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக அவரது இடமான ஹோசூரில் அதற்கு நல்லவிதமான நிலை இல்லை. பூச்சித் தாக்குதல்களுக்கு அதிகமான அளவில் அந்தப் பக்கத்தில் அந்தச் செடிகள் ஆளாகின்றன. அங்குள்ள விவசாயிகள் இந்த மல்லிகையைப் பயிரிடுவதை விட அதிகமாக விரைவில் விலை போகக் கூடிய சாமந்திப் பூவைத்தான் பயிரிட விரும்புகிறார்கள். அது இல்லை என்றாலும் காய்கறிகள் பயிரிட விரும்புகிறார்கள். இந்த நிலை எல்லாம் மாறினால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல் மல்லிகையில் அதிகக் கவனம் செலுத்தி அதை வளர்க்கலாம்.

### *Untouchability*

* Q.—10. THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(a) whether the practice of untouchability has been put as a penal offence under the Government Servants' Conduct Rules in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### சலவைத் தொழிலாளர் கோரிக்கைகள்

* வினா 11. **திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீண்ட காலக் கடன் உதவி அளிக்கக் கோரி சலவைத் தொழிலாளர்களிடம் இருந்து ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இக் கோரிக்கைகளை அமுல் படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம். கோரிக்கைகள் வந்துள்ளதாகப் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(இ) நீண்ட காலக்கடன் வழங்குவதற்கான திட்டம் தற்போது ஒன்றும் இல்லை. இதுபோன்ற கோரிக்கைகள் பிற்பட்டோர் நலக்குழுவின் அறிக்கை வந்தபிறகு பரிசீலிக்கப்பெறும்.

**திரு. வை. சுவாமிநாதன்**: என்ன விதமான கோரிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: தனிக் கேள்வி வேண்டும்.

**Dr. H. V. HANDE**: The Hon. Minister may remember that it is about five or six years or even more since the Washermen's Association of Madras City had applied to Government for sanction of loans to them for buying washing machines and for starting laundry and the Hon. Minister had also promised to consider the request sympathetically. In view of their long pending request and in view of the assurance of the Hon. Minister, will the Hon. Minister give a categorical answer whether any of the particular requests of the Association will be immediately taken into consideration by the Ministry?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: ஏற்கனவே அறிவித்துள்ளது போல் விரைவில் பிற்பட்டோர் நலக்குழுவின் பரிந்துரை வர இருக்கிறது. அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை நடைமுறையில் கொண்டுவர ஆவன செய்யப்படும்.

### கோழிப் பண்ணைகள்

■ வினா 12. **திரு. வை. சுவாமிநாதன்**: மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது கிராமப்புறங்களில் இயங்கி வரும் கோழிப் பண்ணைகளை நகரங்களுக்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. வை. சுவாமிநாதன்**: பொதுவாக இன்று கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் வளர்ப்பதற்கு நிதி ஒதுக்குவது கம்மியாக இருக்கிறது. இன்று கேரளாவிலிருந்து தினசரி இரண்டு இலட்சத்திற்கு அதிகமான கோழி முட்டைகள் நம் மாநிலத்திற்கு வருகின்றன. கிராமப்புறங்களில் கோழிப் பண்ணைகள் அதிகமாக இருந்தால்தான் இதைத் தடுக்க முடியும். ஆகவே, பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் அதிகப்படியான கோழிப் பண்ணைகள் அமைக்க அரசு முன்வருமா?